يا ماحي الذنوب

பாவங்களை அழிப்பவரே! (சுப்ஹான மௌலூத்)

இப்படி நபியை புகழ்வது இணைவைத்தல் என்று வஹ்ஹாபிகள் சொல்கின்றனர்.

பதிலடி......

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் மட்டுமே. அத்தகுதியை அல்லாஹ் யாருக்கும் கொடுக்கவில்லை.

“ஓ நபியே தாங்களும் அல்லாஹ்வைப் போல வணக்கத்திற்குரியவர்தான் “என்று மௌலூதில் ஏதாவது ஒரு வாசகம் வந்திருந்தால், வஹ்ஹாபிகள் கொண்டுவரவும்.

மன்னிப்பு வழங்கும் தகுதியை அல்லாஹ் மற்றோருக்கும் வழங்கியிருக்கின்றான்.

இதோ குர்ஆன் வசனம்

فَاعْفُ عَنْهُمْ وَاسْتَغْفِرْ لَهُمْ سورة آل عمران 159

நபியே அவர்களை நீங்களும் மன்னியுங்கள், (அல்லாஹ்விடம்) அவர்களுக்காக தாங்கள் பாவமன்னிப்பும் தேடுங்கள்.

ஆல இம்ரான்-*159*

மேலும் நபிமொழி ஆதாரங்கள்

وَأَنَا الْمَاحِي الَّذِي يَمْحُو اللَّهُ بِيَ الْكُفْرَ

سنن الترمذي، سنن الدارمي، البخاري

நானே (தீமைகளை) அழிக்கூடியவன். என் மூலமாகவே அல்லாஹ் குஃப்ரை அழிக்கிறான். என்று நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அவர்கள் கூறியுள்ளார்கள்.

فقالت يا رسول الله أتوب إلى الله وإلى رسوله

صحيح مسلم، أحمد، الموطأ

ஆயிஷா நாயகி அவர்கள் நபியிடம் கூறினார்கள். "அல்லாஹ்விடமும் அவனது ரசூலிடமும் நான் பாவமன்னிப்புத் தேடுகிறேன்". ஸஹீஹ் முஸ்லிம்.

மேலும் சில ஸஹாபிகளும் நபியிடம் பாவ மன்னிப்புத் தேடுவதாக கூறியிருக்கிறார்கள்.

يا رسول الله أتوب إلى الله وإليك

الخصائص الكبرى، السيرة الحلبية، سبل الهدى والرشاد، البداية والنهاية، بن كثير

அல்லாஹ்வின் தூதரே நான் அல்லாஹ்விடமும் உங்களிடமும் பாவமன்னிப்புத் தேடுகிறேன். (இந்த சம்பவம் ஐந்திற்கும் மேற்பட்ட வரலாற்றுக் கிரந்தங்களில் உள்ளன.)

يا جالي الكروب

துன்பங்களை அகற்றுபவரே! (சுப்ஹான மௌலூத்)

இப்படி நபியை புகழ்வதும் இணைவைத்தல் என்று வஹ்ஹாபிகள் சொல்கின்றனர்.

பதிலடி……

وَيَضَعُ عَنْهُمْ إِصْرَهُمْ

سورة الأعراف 157

அவர்களின் துன்பங்களை நபியவர்கள் நீக்குவார்கள். அஃராஃப்-157

من نفس كربة من كرب المسلم في الدنيا نفس الله عز وجل عنه كربة من كرب الآخرة

எவர் தனது சகோதரனின் துன்பத்தை உலகில் அகற்றுவாரோ, மறுமையில் அவருடைய துன்பத்தை அல்லாஹ் நீக்குவான்.

என்று நபிகள் நாயகம் صلى الله عليه وسلم அவர்கள் கூறியுள்ளார்கள்.